2010 ஏப்ரல் 27]

வைத்ததன் மூலமாக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் இதனை அனுமதிக்கலாம் என்று ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணத்தை ஒதுக்குவாரேயானால், அவருடைய தொகுதியில் அனைத்து இடங்களிலும் இந்த நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

108—

பொறியியல் கல்லூரி

***84207—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் உண்ணாமலையம்மன் ஆலயத்தின்மூலம் பொறியியல் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை நகரில் பல பொறியியல் கல்லூரிகள் உள்ளதால், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில்மூலமாக பொறியியல் கல்லூரி தொடங்கும் எண்ணமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, அவையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் அதிக அளவு deposit, நிதியிருக்கிறது.

[2010 ஏப்ரல் 27

கர்நாடகாவிலுள்ள கோயில்களிலெல்லாம் இப்படிப்பட்ட பல கல்லூரிகளை, அந்தக் கோயில் நிர்வாகத்தின் சார்பாக நடத்துகிறார்கள். ஆகவே, அதுபோல திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில்மூலமாகவும் இப்படிப்பட்ட கல்லூரிகளைத் தொடங்கி நடத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் மட்டும் திருக்கோயில்களின் சார்பில் கல்லூரிகள் நடத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்வார்கள். தமிழ்நாட்டிலும், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ஏறத்தாழ 54 கல்வி நிறுவனங்கள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்—5, தொழில்நுட்பக் கல்லூரி—1, மேல்நிலைப் பள்ளிகள்—12, உயர்நிலைப் பள்ளிகள்—10, நடுநிலைப் பள்ளிகள்—3, ஆரம்பப் பள்ளிகள்—10, மெட்ரிகுலேஷன் பள்ளி 1, பாடசாலைகள்—12 என்று 54 கல்வி நிறுவனங்களும், 11 சமூக நல நிறுவனங்களும், 34 கருணை இல்லங்களும் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நடத்தப்படுகின்றன.

இருந்தாலும், கடந்த காலங்களில், கல்வித் துறையில் நிதி ஒரு காரணமாக இருந்த காரணத்தால், கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர், அறநிலையத் துறை கல்வித் துறையில் காலடி எடுத்து வைத்தது. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய இந்த நல்ல ஆட்சியில், கல்வித் துறைக்கு ஏராளமான நிதியினை, தாராளமாகத் தந்திருக்கின்ற காரணத்தால், புதிய கல்லூரிகள் தொடங்குகின்ற எண்ணம் தற்போது இத்துறைக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.